திருமண
வினை விளக்கம்



...நெல்வேலி, தென்னிந்திய ::
...சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ::
லிமிடெட்., ::

திருநெல்வேலி :: சென்னை.

விலை அணா 2.

கழக வெளியீடு—கஎ

உ

திருச்சிற்றம்பலம்

திருமணவினை விளக்கம்

இது

தமிழில் கற்பிப்பது

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

First Edition: July 1928.

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, ::
:: TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

JULY 1941

Printers:
The Senguntha Mithran Press, Madras.

பதிப்புரை

தமிழ்மொழி தொன்மையான மொழி என்றும், முத்தமிழ்க்கலைகள் நிறைந்த உயர்தனிச் செம்மொழி என்றும், தமிழ்மக்கள் பண்டு தொட்டே சீர்மை சிறந்து விளங்கினர் என்றும் இப்போது ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டியிருக்கிறார்கள்.

இத்தகைய சீரிய தமிழ்மொழியிருக்க, எங்ஙனமோ தமிழ் மக்களுடைய சடங்குகளெல்லாம் வடமொழியில் காணப்படுகின்றன. ஆரிய மக்கள் தென்னாடு புகுந்த காலத்தே தங்களுக்கு உயர்வு தேடிக் கொள்ளும் பொருட்டும், தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேடிக் கொள்ளும் பொருட்டும், சோதிடம் கற்றும், புரோகிதர்களாகியும், தமிழ்மக்களுடைய சடங்குகளையெல்லாம் வடமொழியில் எழுதிவைத்தும் தமிழ் மக்களை அடிமைப்படுத்திவிட்டார்கள். இதுகாறும் தமிழ்மக்கள் சடங்குகளைப் பொருள் தெரியாமல் கண்மூடித்தனமாய் நடத்திவந்திருக்கின்றார்கள்.

இப்போது சில ஆண்டுகளாகப் பொருள் தெரியாத ஒரு மொழியில் சடங்குகளை நடத்துவது அறியாமையாகும் என்ற உணர்ச்சி

தமிழறிஞர் சிலர் உள்ளத்தில் தோன்றி, அதன் பயனாகக் குலசேகரபட்டினத்திலுள்ள அன்பர் ஒருவர் 'திருமணவினை விளக்கம்' என்னும் இந் நூலைச் செந்தமிழ் மொழியில் திருமுறைகளி லிருந்து மேற்கோள்களை இடையிடையே பெய்து எழுதி நமது செந்தமிழ்ச் செல்வி ரு-ஞ் சிலம்பில் வெளியிட்டார்கள். அதன்படி திரு நெல்வேலி ஜில்லாவிலும், சென்னையிலும் சில திருமணங்கள் நடைபெற்றன. இன்னும் பல இடங்களிலும் அவ்வாறே நடத்த அன்பர்கள் விரும்புகின்றமையால் யாவரும் எளிதிற் பெறு மாறு அதனைத் தனிச் சிறு நூலாக அழகிய தாகப் பதித்து வெளியிட்டிருக்கின்றோம்.

தமிழன்பர்கள் யாவரும் இந்நூலைப் பெற் றுத் தங்கள் தங்கள் சுற்றங்களில் நடைபெற வேண்டிய திருமணங்களை இதன்படி நடாத்திப் புகழும் புண்ணியமும் அடைவார்களாக.

இதனை எழுதியுதவிய ஆசிரியர் அவர்கட்கு எங்கள் நன்றி உரிமையாகின்றது. இதன்கண் செய்ய வேண்டிய திருத்தங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை எழுதியனுப்புகிறவர்கட் குப் பெரிதும் நன்றி காட்டுவோம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

திருச்சிற்றம்பலம்

திருமணவினை விளக்கம்

க. மணமகனும் அவர் பெற்றோரும் மண வறைக்கு வருதல்

(அ) ஆசிரியர் வழிபாடு

திருமணத்தை நடத்திவைக்கிற ஆசிரியத் தன்மை பூண்டு அருள் புரியும்படி தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(ஆ) வேண்டுவன கருதல்

பிள்ளையாரே போற்றி! சிவ சிவ!! சிவபெருமானுடைய அருளினாலே நாட்டில் (ஊர்) ல் யாண்டு த் திங்கள் ஆம் நாள் கிழமை நன்னாளில் நற் பொழுதில் சிவாகம விதிப்படி என்னுடைய மகன் அல்லது மகள் க்குக் கற்பியல் மணம் செய்விக்கும்பொருட்டுப் பிள்ளையாரையும் திருவிளக்கு, நிறை

நாழி, நிறைகுடம், ஆவினிலைந்து, செந்தீ இவற்றி னிடமாக நின்று அருள்செய்யும் இறைவன் இறைவியையும் வழிபடுகின்றேன்.

(இ) பிள்ளையார் வழிபாடு

'ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.'

என்னும் திருமந்திரச்செய்யுளைப் பாடிப் பிள்ளையார் உருவத்தை மனத்தில் எண்ணி,

பிள்ளையார் அப்பனே!

'இவ்வணைமீது எழுந்தருள்க'

என்று சொல்லி இருக்கை கொடுத்து,

'நறுமண நீராடியருள்க'

என்று நீராட்டி,

'இவ்வாடையை அணிந்தருள்க'

என்று ஆடை அணிந்து,

'திருநீறு சாத்தி அருள்க'

என்று திருநீறு சாத்தி,

'நறுமணச்சாந்து பூசி அருள்க'

என்று சந்தனம் பூசி,

'நறுமலர்மாலை சூடி அருள்க'

என்று மலர்மாலை சூடி,

போற்றி மலரிடுக.

உலகிற் கலப்பால் ஒன்ருனய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
இன்றெனக் காரமு தாஞய் போற்றி.

(ஈ) திருவிளக்கு வழிபாடு

போற்றி மலரிடல்.

உலகம் அறிவுற ஒளிர்வாய் போற்றி
எண்வகைச் செல்வம் இணைப்பாய் போற்றி
இறைவன் உருவாய் இசைந்தாய் போற்றி.

(உ) நிறைநாழி வழிபாடு

போற்றி மலரிடல்

(அடியில்)	நான்முக போற்றி
(நடுவில்)	திருமால் போற்றி
(முடியில்)	அரனே போற்றி
(இடப்பக்கம்)	பற்றருள் பவனே போற்றி
(வலப்பக்கம்)	வீடருள் பவனே போற்றி

உள்ளே கங்கை, யமுனை, நருமதை, கோதாவரி, பாலாறு, காவிரி, பொருநை ஆகிய இவற்

றுள் நின்று மாசு போக்கித் தூய்மை ஆக்கும் அருள் அம்மையே போற்றி.

(ஊ) ஆவினிலைந்து வழிபாடு

ஆனிடத்தைந்தும் ஆகும் ஐம்முகக் கடவுள்போற்றி.

(எ) நறும்புகை இடல்

தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு சருக்கரை உண்பித்தல்; சூடன் பணிமாறல்.

(ஏ) வேண்டுகோள்

(பிள்ளையாரிடத்தில்)

பிள்ளையாரே! என்னுடைய மகன் அல்லது மகள் க்கு உமது அருளால் மணம் நடத்தப்போகிறபடியால் இதற்கு யாதொரு இடையூறும் நேரிடாமல் காப்பாற்றியருள்க.

(ஐ) இறைவன் இறைவி வழிபாடு

திருச்சிற்றம்பலம்

"மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்லஃ துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணி னல்லா ளொடும் பெருந்தகை யிருந்ததே."

'எண்ணி லாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனையென உரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.'

திருச்சிற்றம்பலம்

இறைவற்கு என்று பாடிப் போற்றி மலரிடுக.

(உச்சிமுகம்) ஓம் வினை தீர்த்தாளும்
விருப்பனே போற்றி

(கிழக்குமுகம்) வினைப்பய னூட்டும்
வெய்யோன் போற்றி

(தெற்குமுகம்) அகத்தை யொடுக்கும்
அந்தணன் போற்றி

(வடக்குமுகம்) அகத்தை யெழுப்பும்
அண்ணலே போற்றி

(மேற்குமுகம்) கான்முளை யருளும் காதல போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும்
இறைவா போற்றி.

இறைவிக்கு உமையொரு பாகம்
உடையாய் போற்றி

மன்னுபே ரறம்வளர்த்த
மாதே போற்றி

தன்னிகரில் இன்பருளும்
தாயே போற்றி.

2590

(ஓ) செந்தீ வழிபாடு

'சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே'

என்று ஓதிப் போற்றுதல்.

அவி சொரிதல்

உமையொரு பாகம் உடையானுக்கு உவகையாக
வினைதீர்த் தாளும் விருப்பனுக்கு உவகையாக
வினைப்பய னூட்டும் வெய்யோனுக்கு
உவகையாக
அகத்தை யொடுக்கும் அந்தணனுக்கு உவகையாக
அகத்தை யெழுப்பும் அண்ணலுக்கு உவகையாக
கான்முளை யருளும் காதலற்கு உவகையாக
மாதொரு கூறுடை மணாளற்கு உவகையாக.

(ஓ) நறும்புகை யிடல்

தேங்காய் பழம் முதலியன உண்பித்தல்;
சூடன் பணிமாறல்.

(ஔ) வேண்டுகோள்

(முக்கண் அப்பரிடம்)

அருள்வளர் முக்கண் அப்பநின் திருமுன்பு
நின்னருள் நோக்கால் நிகழ்மணம் நடைபெற
ஊறுதீர்த் தருளி உறுதுணை யாய்நின்று
நன்கு நடாத்தி நலமெலாம் புரிந்து
பிள்ளையும் பெண்ணும் பிரிவில் அன்பார்ந்தே
இல்லறம் பேணி இன்பம் திளைத்து
நன்மக்கட் பெற்று நயம்பட வாழ்ந்து
தமிழ்மணங் கமழும் சைவந் தழீஇநல்
ஆல்போல் தளிர்த்தே அறுகுபோல் வேரூன்றி
மூங்கிலன்ன சுற்றம் முசியாமல் வாழ்வோங்கிப்
பல்லாண்டு வாழக் கண்பார்த் தருள்க.

உ. மணமகனும் அவர் மாமனும் வந்து மேற்கூறிய வழிபாடு செய்தபின் கன்னிப் பெண் வருதல்.

(அ) முளை தெளித்தல்

உலகினுக்கு அம்மையப்பரே! ஞாயிறு திங்கள் முதலியவற்றின் இடமாக நின்று இம்முளைகளை எங்ஙனம் வளர்த்து வருகின்றீரோ அங்ஙனமே எங்கள் நல்ல கருத்துக்களையும் நிறைவேற்றுகின்றீர். ஆதலால் என் மருமகன் அல்

லது மருமகள் தொடங்க எண்ணியிருக்கும் மனைவாழ்க்கை வளர்ச்சியடைய அருள்செய்க.

(ஆ) காப்புக் கட்டுதல்

'பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே'

என்று ஓதி வழிபாடு செய்தபின் திருமணம் முட்டின்றி நடைபெறும்பொருட்டுத் திருவருட் காப்பாக இந்நாணைக் கையிற் கட்டுகின்றேன் என்று சொல்லிக் காப்புக் கட்டுதல்.

(இ) பூணூல் அணிதல்

(ஈ) ஐந்தெழுத் தோதல்

(உ) மண ஆடை கொடுத்தல்

௩. மணமகளும் அவள் பெற்றோரும் மேற் கூறிய வழிபாடு செய்தல்.

௪. மணமகளும், அவள் மாமனும் மேற் கூறிய வழிபாடு செய்தபின் கன்னிப்பெண் வந்து முளை தெளித்தல், காப்புக் கட்டுதல், ஐந் தெழுத்து ஓதல், மணச்சிலை கொடுத்தல், வீட்டி

னுள் நாட்பாலை ஏறவைத்தல், கலப்பருப்பிடு
தல் முதலியன.

௫. நாட்கால் நடல்; ஊஞ்சல்.

௬. மகட்கோடை. தந்தை, மணமகள்
கையை மணமகன் கைமேல்வைத்து

(ஊர்)

மகன்

ஆகிய நானும் என் மனைவி ம்
இறைவன் திருவுள்ளப்படி எங்கள் மகள்
திருவளர் செல்வி ஆகிய
இவளை, (ஊர்)

அவர்களுடைய பேரனும்

அவர்களுடைய மகனுமாகிய திருவ
ளர் செல்வன் ஆகிய உங்கட்கு
இல்வாழ்க்கைத் துணைவியாக இறைவன் இறைவி
ஆன்றோர் முன்னிலையில் உள்ளும் புறமும் ஒத்
துக் கொடுக்கின்றோம் (நீர் வார்த்தல்). நீங்கள்
இருவீரும் அன்பும் அறனும் உடையவர்களாய்,
மனையற வாழ்க்கையைச் செம்மைபெற நடத்தி
விருந்தோம்பி வேளாண்மைசெய்து நன்மக்கட்
பேறு உடையவர்களாய் நீடூழி வாழ இறைவன்
அருள்செய்யுமாறு வேண்டுகின்றோம்.

(அ) மணமகள் மாலையிடல்

இறைவன் அருளால் நாம் நடத்தப்போகும் இல்லறவாழ்க்கைக்கு அரிய துணைவராக உங்களைப் பெறுகின்றேன். உங்களைப் பேணுவதில் உங்கள் அருமையான தாய் தந்தையர் போலவும் பெரியோர் ஒழுகியவாறு இல்லறத்தை நடத்துவதில் உங்களுக்கு உண்மையான அமைச்சாகவும் அருமைத் தோழியாகவும் இருந்து வரவும், என் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் உங்கள் மனம் நோவ யான் எச்செயலையும் செய்யாதிருக்கவும், இதுமுதல் உங்களை அல்லாத பிற ஆடவரையெல்லாம் எனக்கு எந்தையும் உடன்றோன்றினரும் மக்களுமாகக் கருதி நடக்கவும், நாம் இருவரும் உடலும் உயிரும் போலவும் கண்ணும் இமையும் போலவும் ஒருவர்க்கொருவர் உதவியாய் இருக்கவும் எம்பெருமான் அருள் செய்யுமாறு வணங்கி இம்மாலையை இடுகின்றேன்.

(ஆ) மணமகன் திருநாண் பூட்டல்

இறைவன் அருளால் நாம் நடத்தப்போகும் இல்லறவாழ்க்கைக்கு அரிய துணைவியாக உன்னைப் பெறுகின்றேன். உன்னைப் பேணுவ

தில் உன் அருமையாகிய தாய் தந்தையர்போல வும் பெரியோர் ஒழுகியவாறு இல்லறத்தை நடத் துவதில் உனக்கு உண்மையான அமைச்சாகவும் அருமைத் தோழனாகவும் இருந்து வரவும், என் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் உன் மனம் நோவ யான் எச்செயலையும் செய்யா திருக்கவும், இதுமுதல் உன்னை அல்லாத பிற மாதரையெல்லாம் எனக்கு ஈன்றாளும் உடன் றோன்றினரும் மக்களுமாகக் கருதி நடக்கவும், நாம் இருவரும் உடலும் உயிரும் போலவும் கண்ணும் இமையும் போலவும் ஒருவர்க்கொரு வர் உதவியாய் இருக்கவும் எம்பெருமான் அருள் செய்யுமாறு வணங்கி இத் திருநாணைப் பூட்டுகின்றேன்.

(இ) மாலை மாற்றுதல்

(ஈ) கண்ணேறு கழித்தல்

(உ) கைப் பிடித்தல்

உமையொருபாகன் முன்னிலையில் நான் இல்லற ஒழுக்கத்தைச் செம்மையாய் நடத்தவும் நன்மக்கட் பேற்றை யடையவும் உன்னைக் கைப் பிடிக்கிறேன்.

(௬) பெரியோர் வாழ்த்துக் கூறி
மணமக்களுக்குத் திருநீறு பூசுதல்

(எ) மணமக்கள் மணவறையை மும்
முறை வலம் வருதல்

அம்மி மிதித்து வடமீன் பார்த்தல் ; பொரியிடல்

அருள்வழி நின்று யாங்கள் அறத்துப்பால்
பற்றிச் செய்வன எல்லாம் அம்மையப்ப
ருக்கு உவகையாக ;

அருள்வழி நின்று யாங்கள் பொருட்பால் பற்
றிச் செய்வன எல்லாம் உமையொரு
பாகனுக்கு உவகையாக ;

அருள்வழி நின்று யாங்கள் இன்பத்துப் பால்
பற்றிச் செய்வன எல்லாம் ஏழை பங்காள
னுக்கு உவகையாக ;

என்று சொல்லிப் பொரியிடுக.

(அ) மனை புகுதல்
பால் பழம் வழங்கல்
மங்கலப் பெண் வாழ்த்தல்
(மணமக்கட்கு)

குறிப்புரை:—சூடன் - கர்ப்பூரம் ; நறும்புகை - சாம்பிராணி ; ஆவினிலைந்து - பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ; கண்ணேறு - திருஷ்டி.

கழகக்
காலணு வெளியீடுகள்.

மாணவர்	குறள்	பை 3
,,	நாலடியார்	,, 3
,,	சங்கச் செய்யுள்	,, 3
,,	தேவாரம்	,, 3
,,	திருவாசகம்	,, 3
,,	திருமந்திரம்	,, 3
,,	திருப்புகழ்	,, 3
,,	பிள்ளைத்தமிழ்	,, 3
,,	பட்டினத்தார் பாடல்	,, 3
,,	தாயுமானவர் பாடல்	,, 3
,,	திவ்வியப் பிரபந்தம்	,, 3
,,	திருவருட்பா	,, 3

மாணவர் செய்யுட்கோவை:
12 காலணு வெளியீடுகள் அடங்கியது:
அழகியநூல்...கலிக்கா அணு 3